தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 2, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024.

1993, மார்ச் 15, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை''.

அறிவாற்றலினால் நம்மைக் காட்டிலும் பெரியவர்களை நமக்கு உற்றவர்களாக, வழிகாட்டிகளாகக் கொண்டு அவர் வழி நடத்தல் நமக்கு எல்லாவற்றையும் விடத் தலைசிறந்த வலிமை யாக அமையும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் குறிப்புகள்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் களான திருவாளர்கள் கே. சுப்பிரமணியம் அவர்கள் 19-2-1993 அன்றும், எம். குருசாமி என்கிற அண்ணாதாசன் அவர்கள் 1-3-1993 அன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் நகரியங்கள் பொது நகர்ப்புறத் தொகுதி யிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்,

[1993 மார்ச் 15

திரு. குருசாமி என்கிற அண்ணாதாசன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு மிகச் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பம்பாயில் வெடிகுண்டுச் சம்பவத்தில் உயிரிழந்தோர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பம்பாய் நகரில் நடந்த இரக்கமற்ற வெடிகுண்டுச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களுக்கான இரங்கல் தீர்மானத்தை, பேரவையின் ஒப்புதலோடு பேரவைமுன் வைக்கிறேன்.

''பம்பாய் நகரில் நடந்த 12-3-1993 வெள்ளிக்கிழமை அன்று கேந்திரமான பல இடங்களிலும் மாடிக்கட்டிடங்களிலும் பயங்கரமான வெடிகுண்டுகளை நாச சக்திகள் சில வெடிக்கச் செய்து பேரழிவை உண்டாக்கி, 300-க்கும் அதிகமான உயிர்ச் சேதங்களை உண்டாக்கிய சோகச் செய்தி அறிந்து இப்பேரவை பெரிதும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது. இந்திய நாடு முழுவதும் அதிர்ச்சிஅடையச் செய்யத்தக்க வகையில் நடைபெற்ற கொடிய மனிதாபிமானமற்ற கொலைவெறிச் செயலுக்கு இப்பேரவை தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இக்கொடிய செயலுக்குக் காரணமான அனைத்து நாச சக்திகளையும் கண்டறிந்து கூண்டோடு அவற்றை அழித்தொழிக்க வேண்டுமென மத்தியப் பேரரசையும் மராட்டிய மாநில அரசையும் இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.